**செ.வெ.எண் : 500** **09.08.2007**

# செய்தி வெளியீடு

## நகராட்சி நிர்வாகத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமண ஆணை. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு **29.11.2001** முதல் ஒட்டு மொத்த தடை விதிக்கப்பட்டது. அரசு பணியின்போது இயற்கை எய்திய அரசு பணியிடங்களில் வாரிசுதாரர்களை கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது.இதன் காரணமாக பணியிடை காலத்தில் இயற்கை எய்திய வாரிசுதாரர்களும் நியமனம் கிடைக்காமல் துன்புற்றனர்.

திராவிட முன்னேற்ற கழக அரசு மீண்டும் பதவியேற்றப் பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடையினை நீக்கியது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

நகராட்சிகளில் காலியாக இருந்து வந்த அனைத்து பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது .

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக துறையில் **15** மருத்துவர் பணியிடங்கள் **48.** உதவிப் பொறியாளர் பணியிடங்கள்**, 3** நகரமைப்பு அலுவலர் பணியிடங்கள், 113 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான நியமன உத்திரவுகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் **14.6.2007** மற்றும் **22.06.2007** ஆகிய தேதிகளில் வழங்கப்பட்டன.

இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 25 விழுக்காடு பணியிடங்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு உத்தரவிட்டதற்கிணங்க, நிலுவையில் இருந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு **78** இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்களுக்கு இன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமனத்திற்கான உத்தரவு சம்மந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கு நேரில் வழங்கப்பட்டது.

நகராட்சிகளில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் அந்தந்த நகராட்சியின் நியமன குழுவின் மூலம் தொடர்ந்து பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியின் போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு தீனபந்து, இ.ஆ.ப, நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., நகர்மன்றத் தலைவர்களின் கூட்டமைப்பின் தலைவர் திரு.ஆலந்தூர் பாரதி, நகராட்சி இணை ஆணையர்கள் திரு.ஹிதேஷ்குமார் மக்வானா, இ.ஆ.ப., திரு வே.க. சண்முகம், கூடுதல் இயக்குநர் திரு பிச்சை, செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.செபஸ்டியன் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை**–9.**